Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 453 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.6**

| | | | |
|---|---|---|---|
| Name: | அருண்குமார் | Calling: | கூலி வேலை |
| Father's/Husband's Name: | தேவன் | Religion: | |
| Village: | சாணாங்குப்பம் | Age: | 36 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 18.08.2025

( எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபட்டது.)

அ.சா.6 முதன்மை விசாரணை

நான் சாணாங்குப்பத்தில் வசித்து கூலி வேலை செய்துவருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. அந்த கையெழுத்தை கடந்த 16.12.2023 ம் தேதி, மதியம் சுமார் 01.30 மணியளவில் கோவிலுக்கு சென்றுவிட்டு புத்துக்கோவில் டோல் கேட் தாண்டி வந்துக்கொண்டிருந்த போது மாருதி ஹோரும் எதிரே ஏற்கனவே விபத்து நடந்த இடத்தில் காவல் உதவி ஆய்வாளர் விசாரித்து ரிபோர்ட் தயார் செய்துக்கொண்டிருந்தார்கள். அதற்கு முதல் நாள் மாலை அந்த இடத்தில் சாலை விபத்து நடந்தது என்றும் எதிரில் மாருதி ஹோரும் உள்ளது என்று குறித்துக்கொண்டும் தயாரித்த ஆவணத்தில் என்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். **பார்வை மகசர் அ.த.சா.ஆ 2 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா 1 முதல் அ.சா 5 வரை என் ஊரை சேர்ந்தவர்களா என்றால் சரிதான். என் பெயர், விலாசம், முகவரி ஆகியவற்றை கேட்டுக்கொண்டு போலிசார் பூர்த்தி செய்யாத வெள்ளை தாளில் என்னிடம் கையெழுத்துப் பெற்றார்களா என்றால் சரியல்ல. பூர்த்தி செய்திருந்தது. விபத்தில் அடிப்பட்ட சேகர் என்பவர் என் ஊரை சார்ந்தவரா என்றால் சரிதான். சேகர் அடிப்பட்டதால் ஊர்காரர்கள் அனைவரும் காவல் நிலையத்தில் தான் சென்று கையொப்பம் போட்டோம் என்றால் சரியல்ல, சம்பவயிடத்தில் நான் போட்டேன். காவல் ஆய்வாளர் விபத்து நடந்ததற்காக சாட்சி கையொப்பம் கேட்டதால் போட்டேன் என்றால் சரிதான். நான் முதன்மை சாட்சியத்தில் சொன்ன விவரங்கள் போலிசார் சொல்லியதன் பேரில் தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக என்னிடம் நான்கு ஐந்து கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை, இது ஒரு கையொப்பம் மட்டும் தான் போட்டேன். பூர்த்தி செய்திருந்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். என்ன விவரம் எழுதியிருந்தது என்றால் அடிப்பட்ட விவரம், எதிரில் இருந்த மாருதி ஹோரும், இடைபட்ட தூரம் போன்ற விவரங்கள் எழுதியிருந்தது. எத்தனை அடி தூரம் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, அதில் எழுதியிருந்தது, தயார் செய்து வைத்திருந்ததில் கையொப்பம் செய்தேன். வழக்கு விவரம் எதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) அருண்குமார்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.08.20 10:14:02 +0530

Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 453 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.7**

| Name: | நாகநாதன் | Calling: | கூலி வேலை |
|---|---|---|---|
| Father's/Husband's Name: | புருசோத்தமன் | Religion: | |
| Village: | சாணாங்குப்பம் | Age: | 38 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 18.08.2025

( எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபட்டது.)

அ.சா.7 முதன்மை விசாரணை

நான் சாணாங்குப்பத்தில் வசித்து கூலி வேலை செய்துவருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. அந்த கையெழுத்தை கடந்த 16.12.2023 ம் தேதி, மதியம் சுமார் 02.00 மணியளவில் நெக்குந்தி மாருதி ஹோரும் எதிரே ஏற்கனவே விபத்து நடந்த இடத்தில் காவல் உதவி ஆய்வாளர் விசாரித்து மேப் வரைந்தார்கள். அந்த இடத்தில் விபத்து நடந்தது என்று காண்பித்து ஆவணங்களை தயார் செய்துக்கொண்டிருந்தார்கள். அதற்கு முதல் நாள் மாலை அந்த இடத்தில் சாலை விபத்து நடந்தது என்றும் எதிரில் மாருதி ஹோரும் உள்ளது என்று குறித்துக்கொண்டும் தயாரித்த ஆவணத்தில் என்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். **பார்வை மகசர் ஏற்கனவே அ.த.சா.ஆ 2 ஆக குறியீடுச்செய்யப்பட்டுள்ளது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா 1 முதல் அ.சா 5 வரை என் ஊரை சேர்ந்தவர்களா என்றால் சரிதான். நாங்கள் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். என் பெயர், விலாசம், முகவரி ஆகியவற்றை கேட்டுக்கொண்டு போலிசார் பூர்த்தி செய்யாத வெள்ளை தாளில் என்னிடம் கையெழுத்துப் பெற்றார்களா என்றால் சரிதான்,சாட்சிக்காக கையெழுத்து போடச்சொன்னார்கள். அந்த கையெழுத்து தான் தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்பட்டது என்றால் சரிதான். வேறு என்ன விவரம் குறிப்பிட்டு இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேப் வரைந்திருந்தார்கள், மற்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு விவரம் எதுவும் தெரியாது என்றால் சரிதான். தனிப்பட்ட முறையில் என்னிடம் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான்.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) நாகநாதன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.08.20 10:14:08 +0530